1990 மே 7]

10-25 மணி

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிறந்த மதுரை மாவட்டத்தின் பகுதியிலே இந்தக் கண்ணகி கோயில் இருக்கிற காரணத்தினாலே, அதனுடைய உரிமை பற்றி இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, இங்கே ஏற்கெனவே வைக்கப்பட்ட அறிக்கைகளில் கூட.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே நான் சொன்ன பிறகும் திரு. இரகுமான்கான் பேச வேண்டுமென்று விரும்பினால் பேசலாம். ஏனென்றால், மிக முக்கியமான பிரச்சினை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல உணர்ச்சிவயப் பட்ட ஒரு பிரச்சினை. இதிலே நாம் மோதுதலை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறு முதல் நாற்பத்தெட்டு வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. பி. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக் கைகளை அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1990) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மீதான விவாதத் தைத் தொடங்கி வைப்பவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

*5-5-1990-ம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.